**பிங்கிரிய பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 07 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பிங்கிரிய பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 191,200 பெறுமதியான வீதி விளக்கு உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 69,000 ஆன விளையாட்டு உபகரணங்கள் பௌதீக ரீதியாக சபையிடம் காணப்படாத போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) ரூபா 875,520 பெறுமதியான 03 நிழற்பட பிரதியெடுக்கும் இயந்திரங்கள், 05 கணனிகள் மற்றும் 08 கணனி உருப்படிகள் என்பன இயந்திரங்களின் கணக்கீடு செய்யப்படாமல் இருப்பின் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதிய நிதிய பேரேட்டுக் கணக்கில் ரூபா 3,499,237 ஆன மீதி பரீட்சை மீதியில் ரூபா 3,416,816 ஆக காண்பிக்கப்பட்டமையால் அம்மீதி ரூபா 82,421 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 04 கணக்கு விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட மீதிகள் தொடர்புடைய பதிவேடு இடையே ரூபா 12,654,142 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டது.

(ஆ) ஊழியர் பிணை சபையின் சொத்தொன்றாகவும் பொறுப்பொன்றாகவும் இருந்த போதிலும், பிணை முதலீட்டுக் கணக்கு மீதிகள் ரூபா 39,885 தொகையாக இருந்ததுடன் பிணைப் பொறுப்பு கணக்கின் மீதி ரூபா 78,085 ஆக இருந்தமையால் ரூபா 38,200 ஆன இணக்கமின்மைகள் கண்டறியப்பட்டது.

**1.3.3 தொங்கல் கணக்குகள்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,539,706 ஆன தொங்கல் கணக்கு மீதியொன்று காணப்பட்டது. இதில் 2015 ஆம் ஆண்டில் சேர்ந்த ரூபா 52,720 ஆன மீதியொன்றும் காணப்பட்டது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 33,866,701 ஆக இருந்ததுடன், ரூபா 261,443 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகளாக இருந்தன.

(ii) அரச நிதி மற்றும் கணக்குப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 200,000 ஆன மீதி 05 ஆண்டுகள் அளவிலான காலப்பகுதியிலிருந்து காணப்பட்டு வருவதுடன், பெறவேண்டிய மீதியொன்றாக உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் மற்றும் கணக்கீட்டு சான்றிதழ்கள் காணப்படவில்லை.

(iii) மதிப்பிழந்த காசோலையின் பேரில் கிடைக்க வேண்டிய ரூபா 61,443 ஆன மீதி 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுவதுடன் மதிப்பிழந்த பதிவு அல்லது நிலுவை மீதியொன்றாக இனங்காணக்கூடிய தகவல்கள் எதுவும் காணப்படவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 27,749,225 ஆகும். அதில் ரூபா 508,206 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ii) நீர் செயற்திட்ட கடன்கொடுத்தோர் ரூபா 310,031 தொகை தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுவதுடன் செலுத்த வேண்டிய தரப்பினர், காரணங்கள் மற்றும் தொடர்புடைய கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) ரூபா 242,889 தொகையான செலுத்த வேண்டிய பெறுமதி சேர் மற்றும் ரூபா 44,341 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி என்பவற்றை சபையினால் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய மீதியொன்றாக இருந்ததுடன் அம்மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 77,759,042 பெறுமதியான 08 கணக்கு விடயங்கள் உருவாகிய விதம் காண்பிக்கப்படுகின்ற அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அக்கணக்கு விடயங்கள் தொடர்பாக திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களை விஞ்சிய கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 189,089 பெறுமதியான 57 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,035,047 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,496,005 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 460,958 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 26,162,115 தொகையான மூலதன உதவி மற்றும் ரூபா 31,602,455 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 594,707 ஆன மிகையொன்றாக மாறியுள்ளது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 25,736 | 30,492 | (4,756) | தனிப்பட்ட வேதனம் | 43,134 | 32,244 | 10,890 |
| (ii) | ஏனையவை | 46,543 | 39,976 | 6,567 | ஏனையவை | 23,110 | 26,565 | (3,455) |
| | உப மொத்தம் | 72,279 | 70,468 | 1,811 | உப மொத்தம் | 66,244 | 58,809 | 7,435 |
| (iii) | மூலதன வருமானம் | 26,162 | 13,557 | 12,605 | மூலதனச் செலவினம் | 31,602 | 37,092 | (5,490) |
| | மொத்தம் | 98,441 | 84,025 | 14,416 | மிகை/ பற்றாக்குறை | 97,846 | 95,901 | 1,945 |
| | செயற்பாட்டு மீளாய்வு | 6,035 | 11,659 | (5,624) | மிகை / பற்றாக்குறை | (595) | (11,876) | 12,471 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 72,279,719 தொகையில் சுமார் 64 சதவீதமானவை அதாவது ரூபா 46,543,000 தொகையும் சபையினால் உழைத்த வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணங்கள், சம்பள மீளளிப்பு போன்ற தன்மையுள்ள பெறுவனவுகளினை உள்ளடக்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 26,162,115 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற

மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற பணமாக உள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 66,244,671 தொகையில் அண்ணளவாக 65 சதவீதமான அதாவது ரூபா 43,134,796 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்த‌ததுடன் அவற்றில் அண்ணளவாக 85 சதவீதமான ரூபா 36,989,877 தொகை, சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்று ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மூலதனச் செலவினமான ரூபா 31,602,455 தொகையில் அண்ணளவாக 17 சதவீதமான தொகையில் அதாவது ரூபா 5,440,340 மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த‌ததுடன் எஞ்சிய மீதி 83 சதவீதம் அதாவது ரூபா 26,162,115 தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் பேரில் வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடங்கியுள்ளது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 2,803 | 3,692 | 207 | 2,666 | 2,108 | 260 |
| (ii) குத்தகை வாடகை | 12,090 | 10,755 | 609 | 14,351 | 10,217 | 624 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 380 | 1,798 | - | 330 | 336 | - |
| (iv) ஏனைய வருமானம் | 70,850 | 56,035 | 28,783 | 64,795 | 44,343 | 24,716 |
| மொத்தம் | 86,123 | 72,280 | 29,599 | 82,142 | 57,004 | 25,600 |

## 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | வருமான சேகரிப்பு பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | நிலுவை மீதி பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | | | | | | | | |
| வீதவரி மற்றும் வரி(10) | 260 | 3,096 | 3,356 | 151 | 2,998 | 3,149 | 109 | 98 | 207 |
| வாடகை (20) | 624 | 3,504 | 4,128 | 116 | 3,403 | 3,519 | 508 | 101 | 609 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் (30 | - | 88 | 88 | - | 88 | 88 | - | - | - |
| ஏனைய வருமானம் (40,50,60,70) | 24,716 | 60,100 | 84,816 | 24,716 | 31,317 | 56,033 | - | 28,783 | 28,783 |
| மொத்தம் | 25,600 | 66,788 | 92,388 | 24,983 | 37,806 | 62,789 | 617 | 28,982 | 29,599 |

(அ) வீதவரி மற்றும் வரியின் கீழ் மீளாய்வாண்டிற்குரித்தாக ரூபா 3,096,000 ஆன வருமானம் பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,998,211 அதாவது 96 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 206,875 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அது வருடாந்த பட்டியலிடலில் 6.6 சதவீதமாக இருந்தது.

(ஆ) வாடகையின் கீழ் மீளாய்வாண்டிற்குரித்தாக ரூபா 3,504,444 ஆன வருமானம் பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,402,678 அதாவது 97 சதவீதமே ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 609,038 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அது வருடாந்த பட்டியலிடலில் 17 சதவீதமாக இருந்தது.

## 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டிற்காக நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 8,000,000 ஆக இருந்த போதிலும், மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து ரூபா 6,989,066 தொகையொன்று மாத்திரம் ஆண்டில் கிடைக்கப் பெற்றிருந்தது. மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 9,000,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 15,919,975 மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்வேறு சந்தர்ப்பங்களின் போது சபைக்கு கிடைத்த பல்வேறு வைப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த தொகையில் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாத மீதிகளின் பெறுமதி ரூபா 98,814 ஆக இருந்தது.

(ஆ) பிரதேச சபைக்கு 3 வருமான பரிசோதகர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், உள்ளவாறான எண்ணிக்கை இரண்டாக இருந்தமையால் சபையால் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் வெளிக்களத்தில் வருமானத்தைச் சேகரிப்பதற்காக தொழிலாளர் ஒருவர் 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார்.

**3.2 வீடு, ஆதனங்கள் அபிவிருத்தி மற்றும் காணிகளைப் பிரித்தல்**

---

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) இன் பிரகாரம் விற்பனையின் பேரில் 1 சதவீத வரித்தொகை மூன்று மாத விற்பனை அறிக்கையின் பேரில் கணக்கிப்படாமல் மதிப்பிடப்பட்ட விற்பனையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்தும், கமநல சேவைகள் திணைக்களத்திடமிருந்தும், தென்னை பயிர்ச் செய்கை சபையிடமிருந்தும் காணித் துண்டாக்கல் கட்டுப்பாட்டுச் சபையிடமிருந்தும் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளாமல் அபிவிருத்தி திட்டங்கள் காணி கூறு இடுதல் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(இ) பிங்கிரிய போவத்த தோட்டம் 21 ஏக்கர் 01 ரூட் 14 பேர்ச் காணி, வீடமைப்பு தேவைகளுக்காக அபிவிருத்தி செய்தவதற்கும் காணி கூறுபோடுவதற்கும் உரித்தாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) காணி பிரித்தல் பதிவேடு மற்றும் 01 சதவீத வரிக் கொடுப்பனவு அடிப்படை பிரகாரம் 61 ஆம் தொடரிலக்கம் மற்றும் 64 தொடரிலக்கமாக பதிவுசெய்யப்பட்டிருந்த இக்காணி உறுதி 226 மற்றும் 113 ஆம் இலக்கமான 02 பகுதிகளுக்குரியதாக இருந்தன. எவ்வாறாயினும் 2015 யூன் 24 ஆந் திகதி தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் தோட்டங்களை கூறாக்குதல் கட்டுப்பாட்டு சபை மூலம் உரித்தாளருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் இக்காணி ஒரு காணியாக இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வீடமைப்பு ஆதனங்கள் அபிவிருத்தி செய்தல் மற்றும் காணி கூறாக்கல் துணை விதிகளின் ஏற்பாடுகளிலிருந்து வேண்டுமென்றே விலகி செயற்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ii) காணியின் உரித்து தொடர்பாக சிக்கலொன்று காணப்படுவதாக ஏடுகளைப் பரீட்சித்த போது உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், ஆதனங்களை ஏலத்தில் விடும் கம்பனிக்கு சட்டரீதியான உரித்தொன்று உள்ளதா குளியாப்பிட்டி காணி பதிவாளர் அலுவலகத்திலிருந்து உறுதிப்படுத்துவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2015 ஏப்ரல் 27 ஆந் திகதிய அபி/15/1/2 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் மூலம் ஆரம்ப புலனாய்வு முடிவுறும் வரை இக்காணியை பிரிப்பதனைஉடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபை செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய கோவை மற்றும் புலனாய்வு பெறுபேறுகள் சமர்ப்பிக்கப்பட முன்னர் உள்ளூராட்சி ஆணையாளரால் மீண்டும் காணியை பிரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது,

(iv) தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் தோட்டங்களை பிரித்தல் கட்டுப்பாட்டு சபையினால் தென்னங் காணிகளை பராமரித்தல் வீதி நிர்மாணத்தின் போது அப்புறப்படுத்தப்படும் தென்னை மரங்களுக்காக மீண்டும் தென்னையை பயிரிடல், உரிய செயற்திட்டத்தை தென்னை பயிர்ச்செய்கை சபையின் மேற்பார்வையின் கீழ் செய்ய வேண்டுமென றி நிபந்தனையையும் உள்ளடக்கி கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம்

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக பிரதேச சபை முறையான நடைமுறையொன்று எடுத்திருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2015 சனவரி 11 ஆந் திகதி மற்றும் 12 ஆந் திகதிகளில் பிரதேச சபைக்குரிய போவத்த, விழத்தவ, படிவௌ மற்றும் வீரபொக்குன ஆகிய வாரச்சந்தைகளின் வருமானம் இனங்காணப்படாத ஆட்களினால் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நபர்களை இனங்கண்டு குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் முதல் கொங்கிரீட் அச்சுக் கற்கள் பிரிவு மற்றும் இரண்டு உற்பத்தி இயந்திரங்களுக்காக ரூபா 587,350 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன

(ஆ) 2000 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட GC – 4267 ஆம் இலக்க இசுசு டிபர் வண்டி 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) வருமான நிர்வாகம்